# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8035258

1. District / மாவட்டம் : Chennai PS / காவல்நிலையம்: DVAC Hqrs Year / ஆண்டு: 2017 FIR No. / மு.த.அ. எண்: 7 Date / நாள்: 30.11.17

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from / நாள் முதல் : 23.6.17 Date to / நாள் வரை : 30.11.2017

   Time Period : நேர அளவு — Time from / நேரம் முதல் : 10.30 hrs Time to / நேரம் வரை : 12.15 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.11.2017 Time / நேரம் : 15.30 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30.11.2017 Time / நேரம் : 18.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 31 KM North

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Regional Transport office Redhills, Chennai

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M.P. Murugesan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் M. Palanivel

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி L-40.B- Bharathidasan Colony, K.K. Nagar, Chennai-78

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. Manickam, Motor vehicle Inspector, O/o the Regional Transport, Office, Red hills

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   – No delay –

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Contents of the FIR is attached in seperate sheets herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed T. Kandasamy Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 30-11-2017

[signature] 30/11/17

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30.11.2017/21.00 hrs

Name: பெயர் ......T. KANDASAMY......
Rank நிலை ...Inspector, SIC, VHAC, Chennai...No. எண் .........

* GCP-240-34(Type 2) 90,000 Cps. 21.3.16(HCL-12)p.2

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தலைமையக குற்ற எண். 7/2017 பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12ன் தொடர்ச்சி பின்வருமாறு.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சிறப்புப் புலனாய்வுப் பிரிவு ஆய்வாளர் தி.கந்தசாமி ஆகிய நான் இன்று 30.11.2017 அன்று மாலை சுமார் 3.30 மணியளவில் எனது அலுவலகத்தில் பணியிலிருந்தபோது சென்னை-78, கே.கே.நகர், பாரதிதாசன் காலனி, கதவு எண்.L40B என்ற முகவரியில் குடியிருந்து வரும் திரு.M.P.முருகேசன் என்பவர் அலுவலகம் ஆஜராகி என்னிடம் எழுத்துபூர்வமான புகார் மனு ஒன்றை அளித்தார். அவர் அளித்த புகார் மனு விவரம் பின்வருமாறு அனுப்புநர் M.P. முருகேசன், த/பெ. திரு.பழனிவேல், L40B, பாரதிதாசன் காலனி, கே.கே.நகர், சென்னை - 600 078. பெறுநர் இன்ஸ்பெக்டர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, ஆலந்தூர், சென்னை-16. ஐயா, நான் சென்னை, கே.கே.நகர், பாரதிதாசன் காலனியில், எண். L40B என்ற முகவரியில் வசித்து வருகிறேன். சென்னை, ஜமாலியா, குக்ஸ் சாலை, ஈடன் கார்டன் தெரு, எண்.84 என்ற முகவரியிலுள்ள எம்.ஜி.ஆட்டோகேஸ் என்ற நிறுவனத்தின் ஆலோசகராக இருந்து வருகிறேன். இந்த எம்.ஜி.ஆட்டோகேஸ் நிறுவனம் மோட்டார் வாகனங்களுக்கு எல்.பி.ஜி கேஸ் பிட்டிங்ஸ் செய்யும் பணியை செய்து வருகிறது. **TN 10 S 6600** என்ற பதிவு எண் கொண்ட Hyundai Getz என்ற காரினை அதன் உரிமையாளர் திரு.எம்.சிவராஜா என்பவர் மேற்படி எம்.ஜி.ஆட்டோகேஸ் நிறுவனத்திற்கு வந்து இந்த வாகனத்திற்கு எல்.பி.ஜி கேஸ் பிட்டிங் செய்து, ரெட்ஹில்ஸ் ஆர்.டி.ஓ அலுவலகத்தில் ஆர்.சி.புத்தகத்தில் பதிவு செய்து தருமாறு கேட்டு அதற்குண்டான ஆவணங்களுடன் அளித்தார். அதனை மேற்படி எம்.ஜி.ஆட்டோகேஸ் உரிமையாளர் திரு.எம்.ஸ்ரீகுமார் பெற்று மேற்படி காரில் எல்.பி.ஜி. கேஸ் உபயோகித்திற்கான உபகரணங்களை பொறுத்தியபின் ரெட்ஹில்ஸ் ஆர்.டி.ஓ அலுவலகத்தில் ஆர்.சி.புத்தகத்தில் மேல்குறிப்பு செய்யும் பணிக்காக என்னிடம் ஆவணங்களை அளித்தார். நான் ஆவணங்களில் உள்ள விவரங்களை போக்குவரத்துத்துறை அலுவலர்கள் கேட்டால் விளக்கி சொல்வதற்கு என்னை மேற்படி ரெட்ஹில்ஸ் ஆர்.டி.ஓ அலுவலகத்திற்கு அனுப்பினார். இந்த பணியை நான் செய்வதற்கு மேற்படி காரின் உரிமையாளர் திரு.எம்.சிவராஜா என்பவர் அதற்கான அங்கீகார கடிதத்தினை கொடுத்துள்ளார். அதன்படி அதற்கான ஆவணங்களுடன் கடந்த 23.06.2017ந் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் ரெட்ஹில்ஸ் ஆர்.டி.ஓ அலுவலகம் சென்று கட்டணம் ரூ.365/-கட்டி விட்டு பின்னர் ஆர்.டி.ஓ அவர்களைசந்தித்து ஆவணங்களை அளித்தேன். அதை ஆய்வு செய்த ஆர்.டி.ஓ அவர்கள் அனைத்தும் சரியாக உள்ளது என்று சொல்லி அப்ரூவ்டு செய்து கையொப்பம் செய்தார். என்னை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.மாணிக்கம் என்பவரை சந்தித்து ஆவணத்தை கொடுக்குமாறு கூறினார். அதன்படி நான் அன்றே காலை சுமார் 11.30 மணியளவில் ரெட்ஹில்ஸ் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.மாணிக்கம் அவர்களை பார்த்தேன். அவர் ஆவணத்தை வாங்கி பார்த்துவிட்டு இந்த எல்.பி.ஜி ஆல்ட்ரேசனை பதிவு செய்ய ரூ.3000/- கொடுக்க வேண்டும் என்று கேட்டார். நான் கட்டணமே ரூ.365/-ஆக இருக்கும்போது நீங்கள் இவ்வளவு தொகை கேட்கிறீர்களே என்று கேட்டேன். அதற்கு அவர் இதில் ஆர்.டி.ஓ-க்கு ரூ.1500/- எனக்கு ரூ.1500/- என்று எடுத்துக்

கொள்வோம் என்றார். அப்போது அவருக்கு பக்கத்து ரூமில் உள்ள நபரை அழைத்து இவர் பெயர் பிரகாஷ் என்றும் இவரிடம் ரூ.3000/- கொடுத்துவிடுங்கள் என்று கூறினார். நான் மோட்டார் வாகன ஆய்வாளரிடம் தற்போது பணம் ஏதும் எடுத்து வரவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் பணத்துடன் வந்தால் தான் வண்டியை ஆய்வு செய்ய முடியும் என்று கூறிவிட்டார். அதன்பின் நான் மூன்று முறை அந்த அலுவலகம் சென்று மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.மாணிக்கம் அவர்களை சந்தித்து கேட்டேன். பணம் கொடுத்தால்தான் வேலை நடக்கும் என கறாராக கூறிவிட்டார். இறுதியாக இன்று (30.11.2017) பகல் சுமார் 12.15 மணியளவில் நான் மோட்டார் வாகன ஆய்வாளரை சந்தித்தபோது பணத்துடன் வந்துள்ளீர்களா எனக் கேட்டார். நான் பணம் கொண்டுவரவில்லை என்று கூறினேன். அதற்கு அவர் பணம் இல்லை என்றால் வேலை நடக்காது என்றார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. என்னிடம் லஞ்சம் கேட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். இப்படிக்கு, ஒப்பம். XXXX/- (M.P.முருகேசன்), நாள்.30.11.2017.

Sir,

Received this petition on 30.11.2017 at about 15.30 hrs. Discreet verification was made over the petition and upon satisfaction, I register a case in V&AC Head Quarters Crime Number 7-2017 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 today (30.11.2017) at about 18.00 hrs.

Sd/- (T.Kandasamy)
Inspector of Police,
SIC, V&AC, Chennai-16.

[signature] 30/11/17

**INSPECTOR OF POLICE,**
**Special Investigation Cell,**
**Vigilance & Anti Corruption,**
**Chennai - 600 016.**

அனுப்புனர்
R.P. முருகேசன்
த/பெ. திரு M. பழனிவேல்
L-40-B. பாரதிதாசன் காலனி
கே.கே.நகர் சென்னை-600078.

பெறுநர்
இன்ஸ்பெக்டர் அவர்கள்
லஞ்ச ஒழிப்புத் துறை
ஆலந்தூர் சென்னை 16.

ஐயா. நான் சென்னை கே.கே.நகர் பாரதிதாசன் காலனியில் எண் L40B என்ற முகவரியில் வசித்து வருகிறேன். சென்னை ஜமாலியா குக்ஸ் சாலை கார்டன் ரோடு எண் 84. என்ற முகவரியிலுள்ள எம்.ஜி. ஆட்டோ கேஸ் என்ற நிறுவனத்தின் அக்கவுண்டராக இருந்து வருகிறேன். இந்த எம்.ஜி. ஆட்டோ கேஸ் நிறுவனம் மோட்டார் வாகனங்களுக்கு எல்.பி.ஜி. கேஸ் பிட்டிங்ஸ் பணியை செய்து வருகிறது. TN10S6600 என்ற பதிவெண் கொண்ட Hyundai Getz என்ற காரினை அதன் உரிமையாளர் திரு எம். கிருஷ்ணா என்பவர் மேற்படி எம்.ஜி. ஆட்டோ கேஸ் நிறுவனத்திற்கு வந்து இந்த வாகனத்திற்கு எல்.பி.ஜி. கேஸ் பிட்டிங் செய்து மேலும் ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் ஆர்.சி. புத்தகத்தில் பதிவு செய்து தருமாறு கேட்டு அதற்கான ஆவணங்களுடன் அளித்தனர். அதனை மேற்படி எம்.ஜி. ஆட்டோ கேஸ் உரிமையாளர் திரு. எம். பழனி(?) பெற்று மேற்படி காரில் எல்.பி.ஜி. கேஸ் உபயோகித்தற்கான உபகரணங்களை பொருத்திய பின்பு ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் ஆர்.சி. புத்தகத்தில் மேல்குறிப்பு செய்யும் பணிக்காக என்னிடம் ஆவணங்களை அளித்தார். நான் இவ்வாறு தனியே உள்ள விவரங்களை பேக்கேஜ் பற்றி(?) அலுவலர் கேட்டால் விளக்கி சொல்வதற்கு என்னை கே.கே. நகர் பகுதியில் ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு அனுப்பினார். இந்த பணியை நான் செய்வதற்கு மேற்படி காரின் உரிமையாளர் திரு. எம். கிருஷ்ணா என்பவர் அதற்கான அங்கீகார கடிதத்தினை கொடுத்துள்ளார். அதன்படி அதற்கான ஆவணங்களுடன் கடந்த

23-6-2017ந் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் ரெட்டியூரில்
ஆர்.டி.ஓ. அலுவலகம் சென்று கட்டணம் ரூ.365 கட்டிவிட்டு
பின்னர் ஆர்.டி.ஓ. அவர்களை சந்தித்து ஆவணங்களை
அளித்தேன் அதை ஆய்வு செய்த ஆர்.டி.ஓ. அவர்கள்
அனைத்தும் சரியாக உள்ளது என்று சொல்லி அப்ரூவ் செய்து
கையொப்பம் வைத்தார் என்னை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.
மாணிக்கம் என்பவரை பார்த்து ஆவணத்தை கொடுக்குமாறு கூறினார்
அதன்படி நான் அன்றே காலை சுமார் 11.30 மணியளவில் ரெட்டியூரில் மோட்டார்
வாகன ஆய்வாளர் திரு மாணிக்கம் அவர்களை பார்த்தேன் அவர்
ஆவணத்தை வாங்கி பார்த்துவிட்டு இந்த எல்.எல்.ஆர். ஆர்டரை பதிவு
செய்ய ரூ.3000- கொடுக்க வேண்டும் என்று கேட்டார் நான் கட்டணமே
ரூ.365 தான் இருக்கும் போது நீங்கள் இவ்வளவு தொகை கேட்கிறீர்களே
என்று கேட்டேன் அதற்கு அவர் இதில் ஆர்.டி.ஓ.க்கு ரூ.1500 எனக்கு
ரூ.1500 என்று எடுத்துக் கொள்வோம் என்றார் அப்போது அலுவலக
பக்கத்து இருக்கையில் உள்ள நபரை அழைத்து இவர் பெயர் பிரகாஷ்
என்றும் இவரிடம் ரூ.3000/- கொடுத்து விடுங்கள் என்று கூறினார்
நான் மோட்டார் வாகன ஆய்வாளரிடம் தற்போது பணம் ஏதும் எடுத்து வரவில்லை
என்று சொன்னேன் அதற்கு அவர் பணத்துடன் வந்தால் தான் வேலையை செய்ய
முடியும் என்று கூறிவிட்டார் அதன்பின் நான் இன்று காலை அலுவலகத்துக்கு
சென்று மோட்டார் வாகன ஆய்வாளர் திரு மாணிக்கம் அவர்களை சந்தித்து
கேட்டேன் பணம் கொடுத்தால் தான் வேலை நடக்கும் என கறாராக
கூறிவிட்டார் இறுதியாக இன்று 30-11-2017 பகல் சுமார் 12.15 மணியளவில்
நான் மோட்டார் வாகன ஆய்வாளரை சந்தித்த போது பணத்துடன் வந்தாயா
எனக் கேட்டார் நான் பணம் கொண்டு வரவில்லை என்று கூறினேன்
அதற்கு அவர் பணம் இல்லை என்றால் வேலை நடக்காது என்றார் நான்
எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை

என்னிடம் லஞ்சம் கேட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்

இப்படிக்கு.

M.P. [illegible]

30.11.2017.

Sir,

Received this petition on 30.11.2017 at about 15.30 hrs. Discreet verification was made over the Petition and upon satisfaction, I register a case in VAC Head quarters Crime Number 7/2017 U/S 7 of the Prevention of Corruption Act, 1988 today (30.11.2017) at about 18.00 hrs.

[signature] 30/11/17

(T. KANDASAMY)
Inspr, SIC, VAC,
Chennai-16